# உக்கிராணத்துவம்

Transcribed from a message spoken in August, 2006 in Chennai

By *R.S. Milton*

*"இவைகளுக்குப் பின்பு இயேசு திபேரியாக் கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார். அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு மலையின்மேல் ஏறி, அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்தார். அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது. இயேசு தம் முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார். தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும் அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார். பிலிப்பு அவருக் குப் பிரதியுத்திரமாக: இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங்கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இரு நூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான். அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி: இங்கே ஒரு பையன் இருக்கிறான். அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு. ஆனாலும், அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான். இயேசு ஜனங்களை உட்கார வையுங்கள் என்றார். அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது. பந்தியிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள். இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள். அப் படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டிய மட்டும் கொடுத்தார். அவர்கள் திருப்தி யடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்து வையுங்கள் என்றார். அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளிலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்" (யோவான் 5: 1-13).*

## உக்கிராணத்துவம் அல்லது கண்காணிப்பு

உக்கிராணத்துவம் என்று தமிழில் ஒரு வார்த்தை இருக்கிறது. ஆங்கிலத்தில் stewardship என் பார்கள். நமக்கு மொழி ஒரு பிரச்சினை அல்ல. அதை ஆங்கிலத்தில் சொன்னாலும் சரி அல்லது தமிழில் சொன்னாலும் சரி. அதன் பொருள் நமக்கு அவ்வளவு சரியாகத் தெரியாது. Stewardship அல்லது உக்கிராணத்துவம் அல்லது கண்காணிப்பு. இப்படி ஒன்று இருக்கிறது.

## வேதாகமத்தை வாசிப்பது எப்படி

இந்த சம்பவம் நமக்கு மிகவும் பரிச்சயமான சம்பவம். வேதத்தின் எந்தப் பகுதியை வேண்டுமானா லும் எடுத்துக்கொண்டு நாம் எதை சாதிக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அதைச் சாதிக்கலாம். இந்தப் பகுதியை எடுத்துக்கொண்டு, "நீங்கள் எல்லாரும் காணிக்கை கொடுங்கள். அப்பொழுது நீங்கள் திருப்தியாகச் சாப்பிட்டு பன்னிரண்டு கூடை நிறைய மீதி எடுப்பீர்கள்," என்று எல்லாரையும் பரவசப்படுத்துவதற்கு நாம் பேசலாம். இப்படி ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் Agendaவை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துவது சகஜம். இந்தப் பிழையை நாம் ஒருபோதும் செய்யாதிருக்க நாம் தேவனுடைய இரக்கத்தை நாட வேண்டும். வேதத்தில் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு, என்னுடைய Agenda பிரகாரம் இன்றைக்கு ஒரு செய்தி கொடுக்க வேண்டும் என்பதற் காக அந்தப் பகுதியை நமக்கேற்றாற்போல் வளைக்கக்கூடாது. அந்தப் பகுதியை எடுத்துக்கொண்டு நேர்முகமாகவும், மறைமுகமாகவும், ஜாடைமாடையாகவும், சூசகமாகவும் ஒரு குறிப்பிட்ட நபருக் கென்று ஒரு செய்தியைக் கொடுப்பதை தேவன் ஒருக்காலும் அங்கீகரிக்கமாட்டார். வேதத்தின் முழுப்பகுதியையும், ஒவ்வொரு பகுதியையும் தேவனுடைய நோக்கம், தேவனுடைய குறிக்கோள், தேவனுடைய திட்டம் என்ற ஒரேவொரு framework of reference, coordinate system வைத்துத்தான் பார்க்க வேண்டும். Every word in the scripture must be understood only in the framework or reference of God's eternal purpose or plan. தேவனுடைய நோக்கத்தின் வெளிச்சத்தில்தான் வேதாகமத்தின் எல்லாப் பகுதிகளையும் பார்க்க வேண்டும், வாசிக்க வேண்டும்.

## பரிசுத்த ஆவியானவரின் வேலை

சில சமயம், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம் சீடர்கள் புரிந்து கொள்வதற்கு மிஞ்சி பேசினார். ஒரு சமயம் அவர் அப்பத்தைக் குறித்துப் பேசுகிறார். "பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்," (மத். 16:6) என்றார். உடனே, "நாம் அப்பங்களைக் கொண்டுவராதபடியால் இப்படிச் சொல்லுகிறார்" என்று சீடர்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். இதைப் பார்க்கும்போது கர்த்தர் பல சமயங்களில் பேசியது அவருடைய சீடர்கள் புரிந்து கொள்வதற்கு மிஞ்சியதாக, அப்பாற்பட்டதாக, இருந்தது என்று நாம் பார்க்கிறோம். ஆனாலும், அதற்காக அவர் பேசாமல் விடவில்லை. அவர்களுடைய திராணிக்கு மிஞ்சிய பல காரியங்களைப் பேசுகிறார். பேசிவிட்டு, "இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்துக்குள்ளும் உங்களை நடத்துவார்," என்று கூறுகிறார். (யோவான் 16:12). சில சமயங்களில் நாம் இந்த நம்பிக்கையில் பேசவேண்டியிருக்கிறது. நாம் பேச வேண்டியதைப் பேசி விடுவோம். பின்பு சத்திய ஆவியானவர் அபிஷேகிக்கும்போது அவர் போதிப்பார் அல்லது வாழ்க்கையில் ஒரு சூழ்நிலை வழியாகப் போகும்போது, "ஆம், 2006ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இப்படிப்பட்ட ஒரு காரியத்தைப் படித்தோம்," என்று ஏற்ற வேளையிலே அதை சத்திய ஆவியானவர் நினைவுக்குக் கொண்டு வருவார். இது பரிசுத்த ஆவியானவருடைய இன்னொரு வேலை. என்ன வேலை? நினைவுக்குக் கொண்டுவருவது. அதனால், நினைவுக்குக் கொண்டுவருவதற்கு நாம் ஒருமுறையாவது கேள்விப்பட்டிருக்க வேண்டும். அல்லது படித்திருக்க வேண்டும். படிக்காத விஷயத்தை அவர் நினைவுக்குக் கொண்டுவரமாட்டார்.

"ஆண்டவரே நான் தேர்வுக்குப் படிக்கவில்லை. ஆனால், புத்தகத்திலுள்ள எல்லாவற்றையும் நினைவுக்குக் கொண்டுவாரும்," என்று ஜெபிப்பது அடிப்படையற்ற ஜெபம். இதை அவர் கனம்பண்ண மாட்டார். வேதத்தின் எந்தப் பகுதியையும் தேவனுடைய நித்தியத் திட்டம் அல்லது நித்திய நோக்கம் என்ற வெளிச்சம் இல்லாமல் வேறு எந்த முறையில் புரிந்துகொண்டாலும் சரி, வியாக்கியானம் செய்தாலும் சரி, அது பொதுவாக நம்முடைய agenda. ஒருவர் ஒரு meeting hall கட்டுகிறார் என்றால் காணிக்கை எடுப்பது இப்போது அவருடைய agenda. இவ்வாறு அவ்வப்போது அவர்களுடைய agenda மாறுபடும். அதை நிறைவேற்றுவதற்காக அவர்கள் வேதத்தைப் பயன் படுத்தலாம். சிலர் இப்படிப்பட்ட காரியத்தில் சமர்த்தர்கள். ஒரு போர்வீரன் லாவகமாக வாளைச் சுழற்றுவதுபோல வேத வசனங்களை அவ்வளவு லாவகமாகச் சுழற்றுவார்கள். கண்ணிமைக்கும் நேரத்தில் அப்படியும் இப்படியும் சுழற்றுவார்கள்.

## தேவன் மனிதன்மேல் வைத்திருக்கும் அக்கறை

ஒரு பக்கம், ஆண்டவராகிய இயேசு அப்பத்தைப்பற்றியும் மீனைப்பற்றியும் கவலைப்படுகிறார். தேவன் நமக்கு ஒரு உடலைத் தந்திருக்கிறார். எனவே, அவர் நம் உடலின் தேவைகளைக்குறித்து அவருக்கு அக்கறை உண்டு. அவர் அதைப்பற்றி மிகவும் அற்பமாகப் பேசுவதில்லை. ஒருவேளை சில சாமியார்கள், "காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா," என்று பேசலாம். இவைகளெல்லாம் கேட்பதற்கு மிகவும் பக்திமயமாகத் தோன்றலாம். ஆனால், இது கிறிஸ்தவ விசுவாசம் அல்ல, கிறிஸ்துவின் போதனையும் அல்ல. அவர் மனிதனை ஒரு சரீரத்தோடு படைத்தார். எனவே, சரீரத்தின் தேவைகளைக்குறித்து அவர் அக்கறையுள்ளவராக இருக்கிறார். திரளான ஜனங்களைப் பார்த்தபோது அவர் சீடர்களை நோக்கி, "நாம் இவர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும்," என்று கூறினார். அவர் ஜனங்களுக்குப் போதிக்கிறார். அதன்பின் அவர் சொல்லுகிறார். "ஜனங்களுக்காகப் பரிதவிக்கிறேன். இவர்கள் என்னிடத்தில் மூன்றுநாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள், இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்துபோவார்களே," என்றார் (மத். 15:32).

## கிறிஸ்துவின் சமநிலை

இதைவைத்து நாம் ஒரு agendaவை உருவாக்க முடியும். அது என்ன? கூட்டம் முடிந்தபிறகு சோறு கொடுக்க வேண்டும் என்ற காரியத்தை நாம் உருவாக்க முடியும். காரியம் என்னவென்றால் அவர் நம்முடைய சரீரத்தின் தேவைகளைக்குறித்து அக்கறைப்படுகிறார். மனிதனுக்கு சாப்பாடு வேண்டும். "சாப்பாடெல்லாம் எதுக்குங்க? அட தொண்டைக்குக்கீழே போனால் அவ்வளவுதான்!" என்று தத்துவம் பேசவில்லை. அதே நேரத்தில் அவர் சமநிலை தவறாதவர். "ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவை

களையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள், இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக் கப்படும்" (மத். 6:31-33). நம் கர்த்தர் சமநிலை பிசகாதவர் என்பதற்கு இது ஒரு நல்ல சான்று. ஒரு புறம், "அவனுக்கு சாப்பாடு கொடுங்கள்," என்பார். இன்னொருபுறம், "சாப்பாட்டைக்குறித்து கவ லைப்பட்டுக்கொண்டிருக்காதே. சாப்பாட்டைக்குறித்து கவலைப்பட்டுக்கொண்டிருந்தால் அஞ்ஞானிக் கும் கிறிஸ்துவை அறிந்த உனக்கும் வித்தியாசமே இல்லை," என்றும் கூறுவார். நாம் சாப்பாட் டைக்குறித்து எப்போதும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால் மற்ற எல்லா மனிதர்களையும்விட பரி தாபத்துக்குரியவர்களாக இருப்போம் என்று பவுல் கூறுகிறார். நாம் இம்மைக்காக மாத்திரம் கிறிஸ் துவைப் பின்பற்றினால் மற்ற எல்லா மனிதர்களையும்விட நாம் பரிதாபத்துக்குரியவர்களாக இருப் போம்.

கிறிஸ்துவைப் பின்பற்றுமாறு சிலர் சிலரை உற்சாகப்படுத்துவார்கள். எப்படி? "உனக்கு சுபிட்சம் உண்டாகும். நல்ல காலம் பொறக்குது, நல்ல காலம் பொறக்குது," என்று சொல்லி. இப்படிச் செய் தால் நாம் மற்ற எல்லா மனிதர்களையும்விட மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாக இருப்போம். நமக்கு உணவு, உடை, உறைவிடம், படிப்பு, திருமணம், போக்குவரத்து வசதி, வேலை ஆகியவை களெல்லாம் வேண்டும் என்று தேவனுக்குத் தெரியும். ஆனால், இவைகளெல்லாம் நம்மை ஆக்கிர மித்துக்கொள்ள நாம் அனுமதித்தால் அது கிறிஸ்தவனுக்கேற்ற காரியம் அல்ல என்று நான் கூறு வேன். இது ஒரு கிறிஸ்தவனுக்கு அல்லது விசுவாசிக்கு உகந்தது அல்ல.

கர்த்தராகிய இயேசு இப்படியாக எச்சரித்தார். "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறி யினாலும் லவுகீகக் கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கு .. எச்சரிக்கையாயிருங்கள்" (லூக்கா 21:34). லவுகீகக் கவலைகள் என்றால் உலகக் கவலைகள். பெருந்திண்டி என்றால் உலகத்தின் சிற் றின்பங்களை அளவுக்கு அதிகமாக அனுபவித்து மகிழ்வது. பொழுதுபோக்கு தேவை. ஆனால், பொழுதுபோக்குத்தான் வாழ்க்கை என்றால் அது அளவுக்கு அதிகம். மேலும் தேவனுக்குக் கொடுக் கிற இடத்தைவிட பொழுதுபோக்குக்கு கொடுக்கிற இடம்-நேரம், மனம், உணர்ச்சி ஆகியவைகளில் எச்சரிக்கையாயிருங்கள்-ஆண்டவர் அதை எச்சரிக்கிறார். ஆகவே, ஒரு பக்கம், அவர்களுக்கு உணவு கொடுக்கிறார். இன்னொரு பக்கம். அவர் உணவைக்குறித்து கவலைப்படவில்லை.

யோவான் 6ஆம் அதிகாரத்தில் இந்த நிகழ்ச்சிக்குப்பின் இன்னொரு காரியத்தைப் பார்க்கிறோம். சீடர்கள் அவரிடத்தில் வந்து, "நாங்கள் உம்மை எங்கெல்லாம் தேடினோம் தெரியுமா? நீர் எப்போது இங்கு வந்தீர்? என்று கேட்டார்கள். அதற்கு இயேசு, "நீங்கள் அப்பம் புசித்து திருப்தியானதினா லேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்," என்றார் (யோவான் 6:26). சில சமயங்களில் கர்த்தர் மிகவும் கறாராகப் பேசிவிடுகிறார். "நீங்கள் என்னை எனக்காகத் தேடவில்லை. என்னை நீங்கள் சாப்பாட்டுக்காகத் தேடுகிறீர்கள்."

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய வார்த்தைகள் நளினமாக இருக்க வேண்டும், கிருபை நிறைந்த தாக இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு மிகவும் diplomaticஆக பேசுகிறோம். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் எப்போதும் diplomaticஆகத்தான் பேச வேண்டும் என்ற அவசியம் இல்லை. diplomatic ஆக என்றால் மற்றவர்கள் மனம் ஒருக்காலும் புண்படக்கூடாது என்று பார்க்கிறோம். அதற்காக மற்றவர்கள் மனதை எந்த அளவுக்கு நாம் புண்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு நாம் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று அர்த்தம் இல்லை. சில சமயம் உள்ளதை உள்ளது என்றும் இல்லதை இல்லது என்றும் சொல்ல வேண்டும்.

"நீங்கள் எனக்காக என்னிடம் வரவில்லை. சாப்பாட்டுக்காக என்னிடம் வருகிறீர்கள்," என்று கடிந்து கொள்ளுகிறார். நேரடியாக.

### உக்கிராணத்துவம்– விநியோகித்தல்

காரியம் என்னவென்றால் உக்கிராணத்துவம். தேவன் நம்மிடத்தில் ஏதோவொன்றைக் கொடுக்கிறார். ஆனால், அது நமக்குரியதல்ல. அதை மற்றவர்களுக்கு விநியோகிப்பதற்காக நம்மிடத்தில் கொடுத் திருக்கிறார். உக்கிராணத்துவம் என்றால் என்ன? *தேவன் என் கையில் கொடுத்திருக்கிற ஒரு சில காரியங்கள், அவை எனக்குரியவை அல்ல, பிறருக்குரியவை.* இந்த இரண்டு வாக்கியங்களை நீங்கள் நினைவில் வைத்துக்கொண்டால் அது போதும். தபால்காரர் ஒரு உக்கிராணக்காரர். அவர் ஒரு money order யை நமக்குக் கொண்டுவருகிறார். அவருடைய பை நிறைய பணம் இருக்கிறது என்பதால் அந்தப் பணமெல்லாம் அவருடைய பணம் அல்ல. அது வேறு பலருடைய பணம். அவர் அதைத் தற்காலிகமாகத தன் பையில் வைத்திருக்கிறார். அவருடைய வேலை என்னவென்றால் அந்தப் பணத்துக்குச் சொந்தக்காரரைக் கண்டுபிடித்து அந்தப் பணத்தை விநியோகிப்பது.

உணவுவிடுதியில் வேலைபார்க்கிற ஒரு serverயை எடுத்துக்கொள்ளலாம். காலையிலிருந்து இரவு வரை தட்டுநிறைய சாப்பாடு சாப்பாடாக அவர் வருகிறவர்களுக்கெல்லாம் விநியாகித்தாலும் அந்த உணவு வகைகளெல்லாம் அவருக்குரியவை அல்ல. எந்த மேஜையிலிருக்கிறவர்களுக்கு சாப்பாடு தேவையோ அந்த மேஜையிலிருக்கிறவர்களுக்கு அவர் சாப்பாடு கொண்டுபோய் கொடுக்கிறார்.

தேவன் நமக்கு உக்கிராணத்துவம் கொடுத்திருக்கிறார். தேவனுடைய நோக்கத்தை உக்கிராணத் துவம் இல்லாமல் நிறைவேற்ற முடியாது. தேவனுடைய நோக்கம் அல்லது தேவனுடைய திட்டம் என்ன? இந்தப் பிரபஞ்சத்தில் கிறிஸ்து எல்லாரிலும் எல்லாவற்றிலும் எல்லாமுமாக இருக்க வேண் டும். இந்த யுகத்தின் முடிவிலே தேவன் இந்தப் பூமியிலே அல்லது பிரபஞ்சத்திலே ஒன்றேவொன் றைத்தான் காண விரும்புகிறார். அது என்ன? கிறிஸ்து. உலகளாவிய கிறிஸ்துவை. ஒரு கூட்டம் மக் களுக்குள் உருவாக்கப்பட்ட கிறிஸ்துவை பிதாவானவர் காண விரும்புகிறார். இன்று அவர் அதைச் செய்து கொண்டிருக்கிறார். இன்று அவர் ஒரேவொரு காரியத்தைத்தான் செய்துகொண்டிருக்கிறார். அது என்ன? அவர் கிறிஸ்துவை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

மகாபலிபுரத்தில் சிலரைப் பார்த்திருக்கிறேன். காலையிலிருந்து மாலைவரை, பிறந்ததிலிருந்து இறக் கும்வரை கல்லை உடைத்துக் கொண்டேயிருக்கிறார்கள், செதுக்கிக்கொண்டேயிருக்கிறார்கள், கொஞ் சம் கொஞ்சமாகச் செதுக்கிக்கொண்டேயிருக்கிறார்கள். இந்த நவீன யுகத்தில் வாழும் நமக்கு எல் லாமே மிகவும் வேகமாக நடந்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். டக்கென்று ஒரு கல்லை இயந்திரத்தில் விட வேண்டும். உடனே வெளியே ஒரு சிலை வந்து விட வேண்டும். Coffee vending machine. Buttonயை அழுத்தியவுடன் கோப்பையில் கா∴பி வந்துவிட வேண்டும். பாலைக் கொதிக்க வைத்து, தண்ணீரைக் கொதிக்க வைத்து, கா∴பித் தூளைப் போட்டு, வடிகட்டி…இதெல்லாம் செய் யப் பொறுமையில்லை.

### கிறிஸ்துவை உருவாக்குதல்

ஒவ்வொரு நாளும் தேவன் நமக்குள் பொறுமையாக ஒரு வேலை செய்துகொண்டிருக்கிறார். அது என்ன? கிறிஸ்துவை நமக்குள் உருவாக்குவது. நாம் ஜெபிக்கின்ற வேளையில் மட்டும் அல்ல. ஞாயிற்றுக்கிழமை மட்டும் அல்ல. வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் இந்தச் சிற்பியின் உளி நம்மேல் பட்டுக்கொண்டேயிருக்கிறது. இதற்கு அவர் ஓய்வு கொடுப்பதேயில்லை. அவர் தொடர்ந்து வேலைசெய்து கொண்டிருக்கிறார். ஆனால், அவர் எப்படி வேலை செய்கிறார் என்றால் மனிதர்கள் மூலமாகத்தான் வேலைசெய்கிறார். ஒருவேளை எனக்குள் கிறிஸ்து ஓர் அம்சத்தில் குறைவுபடுகிறார். அந்த அம்சத்திலே கிறிஸ்துவை உருவாக்க வேண்டும். அந்தக் கிறிஸ்துவை அவர் நேரே பரலோகத்திலிருந்து உருவாக்குவதில்லை. இந்தப் பூமியில் ஒரு சூழ்நிலையை அமைப் பார். ஒரு சில மனிதர்களைப் பயன்படுத்துவார். குறிப்பாக தேவனுடைய பிள்ளைகளைப் பயன் படுத்துவார். ஒருவேளை என்னிடத்தில் கிறிஸ்து ஒரு அம்சத்தில் குறைவுபடுவதை இந்தச் சகோதரர் பார்க்கிறார். என்னிடத்தில் குறைவுபடுகிற கிறிஸ்துவை நிறைவுசெய்வதற்காக அவர் எனக்குப் பகிர்ந்துதருகிறார். தேவனுடைய வார்த்தையை என்னுடன் பகிர்ந்துகொடுப்பார். அவர் ஜெபிக்கின்ற ஜெபம் எனக்குள் கிறிஸ்துவைக் கொண்டுவரும். அல்லது ஒரு சகோதரர் அல்லது ஒரு சகோதரி சொல்லுகிற சாட்சி எனக்குள் கிறிஸ்துவைக் கொண்டுவரும். அல்லது ஒருவர் பாடிய பாடல் எனக்குள் கிறிஸ்துவைக் கொண்டுவரும். எதையும் நாம் அற்பமாக எண்ணக்கூடாது. நாம் ஏதோ ஒரு வகையில் நம் அன்றாட வாழ்க்கையிலும் அல்லது இதுபோன்ற சிறப்பான தருணங்களிலும் (கூட்டம் என்பது சிறப்பான தருணம்) கிறிஸ்துவைப் மற்றவர்களுக்குப் பரிமாறவேண்டும் அல்லது புகட்ட வேண்டும். புகட்ட வேண்டும் என்றால் சின்னக் குழந்தைகள் பால் குடிக்கும்போது ஒரு சங்கு வைத் திருப்பார்கள். சங்கில் பால் ஊற்றி அதை குழந்தைக்குப் புகட்டுவார்கள். ஏதோ ஓர் அம்சத்தில் சிறி தளவு கிறிஸ்துவையாவது நாம் மற்றவர்களுக்குப் புகட்ட வேண்டும். அவிசுவாசிகளுக்கும் புகட்ட வேண்டும். விசுவாசிகளுக்கும் புகட்ட வேண்டும். புகட்டுவதென்றால் ஓர் ஆளைப் பிடித்து, ஓர் ஒலி பெருக்கியை வைத்து, “இப்போது கேளுங்கள், நான் உங்களுக்குப் பிரசங்கிக்கப் போகிறேன், பாவியே, கிறிஸ்து உனக்காக மரித்தார். உன் பாவத்திலிருந்து மனந்திரும்பு,” என்பதல்ல. இது கிறிஸ்துவைப் புகட்டாது.

அவர் பரிசேயர்களிடம் பேசியதுபோல விபசாரிகளிடம் பேசவில்லை. விபசாரத்தில் கையும் களவு மாகப் பிடிபட்ட பெண்ணிடம் அவர் பேசிய வார்த்தைகள் என்ன தெரியுமா? “நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே.” ஆனால், பரிசேயர்களிடம் கடுமையாகச் சாடுகிறார். எந்த மனிதனிடம் எப்படிப் பேச வேண்டும் என்று வகைதெரியாமல் நாம் பேசக்கூடாது. பரிசேயர்களிடம் நாம் மிகவும் கிருபையோடு

பேசுவோம். “மதிப்புக்குரிய ஐயா அவர்கள் நம் மத்தியில் இருக்கிறார்.” உண்மையில் நாம் அவரைச் சாட வேண்டும். விபசாரம் பண்ணுகிற பெண்ணிடம் நாம் அன்பாகப் பேச வேண்டும். “இனி மேல் அப்படிச் செய்யாதே. நீங்கள் சமாதானமாகப் போங்கள்.” இங்கே சாடுவது அங்கே பாடுவது. “மதிப்புக்குரிய ஐயா அவர்கள் நம் மத்தியில் வந்திருப்பது நமக்கு மிகப்பெரிய சிலாக்கியம்.” என்ன சிலாக்கியம்? விபசாரத்தில் பிடிபட்ட பெண், “கர்த்தர் என்னை மன்னித்தார்,” என்று சொல்வது அவர் பண்ணுகிற ஒரு மணிநேரப் பிரசங்கத்தைவிட ஆயிரம் மடங்கு பிரயோஜனமாயிருக்கும்.

## கிறிஸ்துவைக் கொடுப்பது

நாம் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கென்று எதையாவது ஆயத்தம் பண்ணிக்கொள்ள வேண்டும். ஆண்டவர் கேட்கிறார்: “இவ்வளவு திரளான மக்களுக்கு சாப்பாடு கொடுப்பது எப்படி?” நாம் என்ன செய்வோம்? நாம் மிகவும் பெரிய அளவில் நினைப்போம். “இயேசு கிறிஸ்துவைப் புகட்டுவது அப்படி இப்படி என்றெல்லாம் நீங்கள் சொல்லுகிறீர்கள். எனக்கு சுவிசேஷம் சொல்லத் தெரியாது.” நீங்கள் சுவிசேஷமெல்லாம் சொல்ல வேண்டாம். இன்று காலையில் என் பாரம் இதுதான். “நான் ஜெபம் பண்ணினேன். அப்படியே முழங்கால் படியிட்டு கண்ணீர் விட்டு கதறி அழுது எனக்காக ஜெபம் பண்ணுங்கள் சகோதரரே” என்று சொன்னார்கள். நானும் ஜெபித்தேன் என்பதுபோன்ற அதிசயிக்கத்தக்க சாட்சியை நாம் எதிர்பார்க்க வேண்டாம். கிறிஸ்துபைப் புகட்டுவதென்றால் என்ன வென்று நான் சொல்லட்டுமா? அவிசுவாசியொருவர் நம்முடன் வேலைபார்க்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவருக்குக் கிறிஸ்துவைப் புகட்டுவதென்றால் என்ன தெரியுமா? “ஹலோ, Good Morning,” என்று சொல்லுவோம். இதுதான் அவர்களுக்குக் கிறிஸ்துவைப் புகட்டும் வழி. “ஹலோ, எப்படி இருக்கீங்க?” இது கிறிஸ்துவைப் புகட்டுவது, இன்முகத்தோடு. ஒரு வருடம், 2 வருடம், 3 வருடம் வெறும் ஹலோ மட்டுமே நீங்கள் சொல்லிக்கொண்டிருந்தால் போதும். “அவர் நினைப்பார். இவர் எப்போதுமே மகிழ்ச்சியாக இருக்கிறார்.” அவருடைய வாழ்க்கையில் நெருக்கங்கள் வரும் போது, “யாரிடமாவது பேச முடியாதா?” என்று ஏங்கும்போது யாரிடத்தில் வருவார்? நம்மிடத்தில் வருவார்கள். இது தேவன் வேலை செய்கிற விதம்.

## கணக்கன் பிலிப்பு

பிலிப்புவை நோக்கி, “இவர்கள் சாப்பிடுவதற்கு ஏதாவது கொடுக்க வேண்டும்,” என்று இயேசு கூறுகிறார். தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும் அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார். இது அற்புதம். “பிலிப்பு, இவர்களுக்கெல்லாம் சாப்பாடு கொடுக்க வேண்டும்? என்ன செய்யலாம்?” பிலிப்புவின் மனம் ஒரு கணக்கனுடைய மனம். அவர் ஒரு நல்ல கிரேக்கர், கற்றவர். மக்களை யெல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு ஒரு குத்துமதிப்பாக எவ்வளவு மக்கள் இருப்பார் என்று கணக்கிடு கிறார். 1 தினாருக்கு எத்தனை அப்பம் கிடைக்கும் என்று கணக்கிடுகிறார். Back of the envelop calculation என்று சொல்வார்கள். “இருநூறு தினாருக்கு அப்பங்கள் வாங்கினாலும் ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சம் சாப்பிட்டாலும் போதாது.” இது பிலிப்பு. இதுதான் strategy. பிலிப்பு ஒரு நல்ல strategist. எல்லாருக்குக் கொஞ்சம் கொஞ்சம். எல்லாருக்கும் வயிறு நிறையக் கொடுக்க வேண்டாம். ஆனால், வெறும் வயிற்றோடு அனுப்ப வேண்டாம்.

## ஆலோசகன் அந்திரேயா

அந்திரேயா அவரை நோக்கி என்ன சொல்லுகிறார்? “இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு.” இப்படிச் சொன்னதும் மற்ற அப்போஸ்தலர்கள் எங்கே சிரித்துவிடுவார்களோ என்று பயந்து, “ஆனாலும் அவைகள் இத் தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம். சும்மா ஒரு தகவலுக்காகச் சொன்னேன்,” என்றான். அந்திரேயா வினிடத்தில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார். “இங்கு ஒரு சிறு பையன் இருக்கிறான். அவனிடத்தில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் இருக்கின்றன.” இது முட்டாள் தனமான ஆலோசனைபோல் தோன்றும். ஆனால், அந்த சீடர்கள் இருக்கிறார்களே! யாராவது எதை யாவது பேசினால் போதும். அவர்மேல் அப்படியே பாய்ந்துவிடுவார்கள். “நீ சும்மா இரு. பெரிய ஆலோசனை கொடுக்கிறார் ஆலோசனை. நடக்கிற ஆலோசனை கொடுப்பியா!” அவர்களுக்குள் இப்படிப்பட்ட உரையாடல் நடப்பதுண்டு.

ஒருநாள் ஒருவர் சொன்னார். “நான் வலது பக்கத்தில் உட்காருவேன்.” இன்னொருவர் சொன்னார் “நான் இடது பக்கத்தில் உட்காருவேன்.” மற்றப் பத்துப் பேருக்கும் கோபம் வந்துவிட்டது. அவர்கள் எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள் என்று எனக்குத் தெரியாது. “நாங்களெல்லாம்

அப்போ...” மேலும் வழியில் போகும்போதெல்லாம் பேசிக்கொள்கிறார்கள்: பரலோக ராஜ்யத்தில் நம்மில் யார் பெரியவன்? கர்த்தர் அதைக் கேட்டுக்கொண்டே வருகிறார். ஆனால், அவர் பதில் சொல்லவில்லை. ஒருவேளை அவர் வழியில் எங்கே ஒரு குழந்தை கிடைக்கும் என்று காத்திருப்பார் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இவர்களுக்குப் பிரசங்கம் பண்ணினால் புரிந்துகொள்வதுபோல் தெரியவில்லை. “இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பர லோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்,” என்று சொன்னார் (மத். 18:4).

“ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் இவர்களுக்கு எம்மாத்திரம்? நான் எப்படி மற்றவர்களுக்குக் கிறிஸ்துவைப் பகிர்ந்துகொடுப்பது? நான் எம்மாத்திரம்?” ஒரு ஆள், “இருநூறு பணத்துக்கு வாங்கி னாலும் போதாது,” என்கிறார். இன்னொருவர், “ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் எம்மாத் திரம்?” என்கிறார்.

### கிறிஸ்துவைப் பரிமாறத் தகுதியற்றவன்

ஒன்று சொல்லட்டுமா? எந்தப் பெரிய மனிதனாக இருந்தாலும் அவன் கிறிஸ்துவைப் பரிமாறுவதற் குத் தகுதியற்றவன். “இல்லங்க, அவர் மாபெரும் ஊழியக்காரர். அவர் T.Vயிலெல்லாம் பிரசங்கம் பண்ணக்கூடியவர்.” கிறிஸ்துவைப் பரிமாற எந்த மனிதனும் தகுதியடையவன் அல்ல. நாம் மற்ற வர்களுக்குக் கொஞ்சமாவது கிறிஸ்துவைப் பரிமாற வேண்டும் என்று சொன்னவுடன் சாத்தான் நாம் நேற்று செய்த பாவங்களை நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டுவருவான். போனவருடம் செய்த பாவம், ஐந்து வருடங்களுக்கு முன்பு செய்த பாவம் அல்லது நாம் செய்த எல்லாப் பாவங்களை யுமே நமக்குமுன் ஓட்டிக்காட்டுவான். “இப்போது சொல், நீ கிறிஸ்துவைப் பரிமாறப் போகிறாயா?” நாமும் வாய்மூடி மௌனியாகிவிடுவோம். நம் இயற்கையான மண்டலத்தில், இயற்கையான தாலந்துகள், இயற்கையான பலம், இயற்கையான ஆற்றல், இயற்கையான சாமர்த்தியம் ஆகியவை களை வைத்து நாம் ஒருக்காலும் கிறிஸ்துவைப் பரிமாறமுடியாது. இதை நான் கூரைமேல் நின்று கொண்டு சத்தமிட்டுக் கூறுவேன். இயற்கையான தளம், இயற்கையான பலம், இயற்கையான ஆற் றல், இயற்கையான யுக்திகள், இயற்கையான பேச்சு சாமர்த்தியம், நிர்வாக சாமர்த்தியம், இவை களையெல்லாம் வைத்து நாம் கிறிஸ்துவை ஒருக்காலும் பரிமாற முடியாது.

அவர் மக்களை உட்கார வைக்கிறார். அவர்களெல்லாரும் உட்காருகிறார்கள். ஐந்து அப்பங்களை யும் இரண்டு மீன்களையும் எடுத்து வானங்களை நோக்கிப் பார்த்து, ஸ்தோத்திரம் செய்து...(நன்றி சொல்லி)...இது ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம் என்று திரும்பத்திரும்பக் கூறுவதல்ல. “நாமெல்லாரும் ஸ்தோத்திரம் சொல்வோம்.” இதுவல்ல. இருதயத்திலிருந்து வர வேண்டும். “பிதாவே உமக்கு நன்றி. நீரே ஆசீர்வாதத்தின் ஊற்று. நீர் எங்களுக்குப் போதுமானவர். எங்கள் தேவையெல்லாம் நீரே.” இந்த ஒரு வாக்கியம் போதும்.

### எது ஆசீர்வாதம்

சகோதரர் வாட்ச்மேன் நீ தன்னுடைய Twelve Baskets Full என்ற புத்தகத்தில் இவ்வாறு எழுது கிறார். ஆசீர்வாதம் என்றால் என்னவென்று தெரியுமா? ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களை யும் வைத்து ஒருவன் சாப்பிடலாம். அதை நாம் ஆசீர்வாதம் என்று சொல்ல முடியாது. ஒரு வேளை ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொஞ்சம் பகிர்ந்து இரண்டுபேர் சாப்பிடலாம். ஆனால், அதுவும் ஆசீர்வாதம் அல்ல. ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பகிர்ந்து கொண்டு கொஞ்சம் கஷ்டப்பட்டு ஐந்துபேர் சாப்பிடலாம். ஆனால் அதுவும் ஆசீர்வாதம் அல்ல. இருநூறு பணம் கொடுத்து வாங்கி அதை கொஞ்சம் ஒழுங்குசெய்து 200 பேர் சாப்பிடலாம். ஆனால், அதுவும் ஆசீர்வாதம் அல்ல. ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் வைத்து ஐயாயிரம் பேர் சாப்பிடுகிறார்கள் அல்லவா? இதற்குப் பேர்தான் ஆசீர்வாதம்.

என்னுடைய தாலந்துகளுக்கும், என்னுடைய பலத்துக்கும், என்னுடைய முயற்சிகளுக்கும் மிக மிக மிக மிக மிக அப்பாற்பட்டு தேவன் ஒரு வேலையைச் செய்கிறார். நான் செய்தது இவ்வளவு. நான் படித்தது இவ்வளவு. எனக்கு 80 மதிப்பெண் கிடைக்க வேண்டும் அல்லது 60 மதிப்பெண் கிடைக்க வேண்டும். ஆனால், எனக்கு 98 மதிப்பெண் கிடைக்கிறதென்றால் அதற்கு பெயர் ஆசீர்வாதம். என் னுடைய வேலையின்படி இரண்டுபேர் இரட்சிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இருபதுபேர் இரட்சிக்கப் பட்டுவிட்டார்கள். இதற்கு பெயர் என்ன? ஆசீர்வாதம். நான் சொன்ன சாட்சியைக் கேட்டு யாருமே இரட்சிக்கப்பட்டிருக்கக் கூடாது. ஆனால், ஆச்சரியமோ ஆச்சரியம். என் சாட்சியைக் கேட்டு ஒருவர் இரட்சிக்கப்பட்டு விட்டார். இதற்கு பெயர் என்ன? நம்முடைய இயற்கையான தாலந்துகள், இயற்கை யான பலம், இயற்கையான ஆற்றல் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டு தேவன் ஒன்றைச் செய்கிறார்

இல்லையா? அதுதான் ஆசீர்வாதம். நாம் கற்பனைகூட செய்து பார்க்க முடியாத காரியத்தைத் தேவன் செய்கிறார் இல்லையா? அதுதான் ஆசீர்வாதம். தேவன் நம் தேவைகளைத் தந்து நம்மை ஆசீர்வதித்தார் என்று சொல்லும்போது இது ஆசீர்வாதம். இவர்கள் தங்களுடைய தாலந்துகளை வைத்து, திறமைகளை வைத்து, நல்ல நிர்வாகம்பண்ணி ஆயிரம்பேராக மாறிவிட்டார்கள் என்றால், உங்கள் நிர்வாகத் திறமைக்குத்தான் மகிமை. ஆனால், தேவனுக்கே மகிமை உண்டாவதாக. நம் முடைய strategy கிறிஸ்துவே. "ஆண்டவரே, எங்களிடத்தில் இருப்பது மிக மிகக் குறைவு. ஆனால், உம்முடைய ஆசீர்வாதம் அதன்மேல் தங்கட்டும். ஆண்டவரே, எங்கள் தேவையைப் பார்க்கிறோம். எங்களிடத்தில் இருப்பதையும் பார்க்கிறோம். எங்கள் இருதயம் தொய்ந்துபோகிறது, நம்பிக்கை இழந்து விடுகிறோம்." பழைய ஏற்பாட்டிலுள்ள ஒரு பதத்தைப் பயன்படுத்துவதானால் எங்கள் முட்டிகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளுகின்றன. பயப்படும்போது இப்படிச் சொல்லுவார்கள். அவனுடைய இருதயம் தண்ணீராய்க் கரைந்துவிட்டது. அந்த மக்களெல்லாம், "எங்களுக்குச் சாப் பாடு கொடுங்கள்," என்று கேட்டிருந்தார்கள் என்று வைத்துக்கொள்வோமே. நிச்சயமாக அவர்களு டைய இருதயம் கரைந்து போயிருக்கும்.

### இயற்கையான தளம் இல்லை

சரி, இப்போது நாம் என்ன செய்யப் போகிறோம்? அவர் வானத்தை அண்ணாந்து பார்த்து... பிதாவே எல்லா ஆசீர்வாதங்களின் ஊற்று. நம்முடைய தாலந்து அல்ல, நம்முடைய சாமர்த்தியம் அல்ல, நம்முடைய ஜெபம் அல்ல, நம்முடைய சாமர்த்தியம் இன்மையும் அல்ல. காலேபையும் யோசுவாவையும் பழைய ஏற்பாட்டிலே பார்க்கிறோம். கானான் தேசத்தை வேவுபார்க்க மோசே ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒருவனைத் தெரிந்தெடுத்து அனுப்பினார். பத்துபேர் எதிர்மறையான துர்ச்செய்தியைச் சொன்னார்கள். ஆனால், காலேபும் யோசுவாவும், "கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந் தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார்," என்று கூறினார்கள்" (எண். 14:8) நம்முடைய சாமர்த்தியமும் ஒன்றுமில்லை. நம்முடைய சாமர்த்தியம் இன்மையும் ஒன்றுமில்லை. நம்முடைய பாடலும் ஒன்றுமில்லை. நம் முடைய பாடல் இன்மையும் ஒன்றுமில்லை. நம்முடைய பிரசங்க சாமர்த்தியமும் ஒன்றுமில்லை. நம்முடைய பிரசங்க சாமர்த்தியம் இன்மையும் ஒன்றுமில்லை.

தேவன் நம்மேல் பிரியமாயிருந்தால்...தேவனுக்கு அங்கு ஒரு தேவை இருக்கிறதென்றால்...நம்முடன் படிப்பவர்களை நம்மைக்கொண்டு தேவன் இரட்சிக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்திருக் கிறார். என்னுடன் வேலை செய்யும் சிலரை தேவன் இரட்சிக்க வேண்டும் என்று தீர்மானித்திருக் கிறார். நம்முடைய அயலகத்தாரை இரட்சிக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்திருக்கிறார். ஆனால் நம்முடைய தாலந்துகள், திறமைகள் அதற்குப் போதாது. ஆனால், தேவன் செய்வார். நாம் கற்பனைகூட செய்துபார்க்க முடியாத அளவுக்குத் தேவன் செய்வார். எபேசியர் 3:20 Living Bible : Now glory be to God who by His mighty power has worked within us, is able to do far more than ever we would ask or even we know infinitely…நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிற தற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவ ராகிய அவருக்கு, Living Bibleயில் இருப்பதுபோல் தமிழில் அவ்வளவு விவரமாக இல்லை. அற்புத மான வசனம்.

### கிறிஸ்துவை வழங்குவது

நான் ஒரு கூட்டத்தை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு இதைச் சொல்லவில்லை. பல வேளை களில் நம்மிடம் குறைவாக இருப்பதாகவே நாம் உணர்கிறோம். என்னுடன் வேலை செய்பவருக்கு, படிப்பவருக்கு நாம் எப்படிப் பகிர்ந்துகொடுப்பது. என்னுடன் படிக்கிற, வேலைபார்க்கிற யாருக்கா வது சுவிசேஷம் அறிவித்து இரட்சிப்புக்குள் கொண்டுவர முடியுமா? முடியும். நான் எவ்வளவோ தவறு செய்கிறேன். என்னுடைய வாழ்க்கையைப் பார்த்தால் யாராவது இரட்சிக்கப்படுவார்களா? ஒருவேளை நம்மைப் பார்த்தால் யாரும் இரட்சிக்கப்படாமல் போகலாம். நம்மிடம் கிறிஸ்து இருக் கிறார். ஏதோ ஒரு அளவுக்கு கிறிஸ்து நம்மில் இருக்கிறார். அந்தக் கிறிஸ்து மிகவும் வல்லவர்.

நான் எண்ணிக்கையைப்பற்றிப் பேசவில்லை. தேவையைப் பற்றிப் பேசுகிறேன். நம்மிடம் இருக்கும் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் நாம் யாரிடம் கொடுக்க வேண்டும்? யாருக்காகப் பயன்படுத்த வேண்டும்? ஆண்டவருக்காகப் பயன்படுத்த வேண்டும். மற்றவர்களுக்குப் பரிமாறுவதற் காக நாம் அதைப் பயன்படுத்த வேண்டும். ஒன்றுமே கொண்டுவராமல் தேவன் ஒரு போதும் ஆசீர்வதித்ததேயில்லை. "யாருமே என்னிடம் பேசினதேயில்லை. ஆனால் நான் இரட்சிக்கப்பட்

டேன்" என்று எந்த மனிதனும் சொல்லவே முடியாது. நேரே பரலோகத்திலிருந்து ஒரு ஒளி தோன்றி, "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. இயேசுகிறிஸ்துவிடம் விசுவாசம் வை." என்று சவுலைத் தவிர வேறு யாரும் சாட்சி கொடுத்ததில்லை. நாமெல்லாருமே ஒரு மனிதன் மூலமாகத்தான் இயேசுகிறிஸ்துவைப் பெற்றுக் கொண்டோம். இது தேவனுடைய ஒரு கோட்பாடு. மனிதனை ஒரு கருவியாக, ஒரு பாத்திரமாகப் பயன்படுத்தாமல் தேவனால் ஒன்றும் செய்ய முடியாது. எங்கே நாம் பயிற்சி செய்யலாம் என்றால் நம் மத்தியில் நாம் பயிற்சி செய்யலாம். "சரி, நான் ஓர் ஆளிடம் பேச வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால் என்னால் பேசவே முடியாது." முதலாவது நம்முடைய ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் என்ன தெரியுமா? நம்முடைய ஒரு வாக்கிய ஜெபம். "ஆண்டவரே, என்னுடன் வேலை பார்ப்பவரை ஆசீர்வதியும்," போதும். இதை நாம் ஜெபிக்க முடியுமா முடியாதா? முடியும். "என்னுடன் படிப்பவர்களை ஆசீர்வதியும்" என்றால் என்ன? கிறிஸ்துவே ஆசீர்வாதம். *ஆசீர்வதியும்* என்று நான் சொல்லும்போது "ஆண்டவரே, அவர் இப்போது 98 மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறார். அவர் 98.5 மதிப்பெண்கள் வாங்க உதவும்," என்பதை நான் ஆசீர்வாதமாகக் கூறவில்லை. வேறு எந்த வழியிலும் நாம் மற்றவர்களுக்குக் கிறிஸ்துவைப் புகட்ட முடியவில்லையென்றாலும் ஜெபிப்பதின் மூலமாக நாம் அவர்களுக்குப் கிறிஸ்துவைப் புகட்ட முடியும்.

அல்லது நாம் அவர்களுக்கு ஒரு துண்டுபிரசுரத்தைக் கொடுக்கலாம். துண்டுப்பிரசுரம் என்று சொல்லும்போது இப்போது தெருவிலே கொடுத்துக்கொண்டிருக்கிறார்களே நான் அதைச் சொல்லவில்லை. நன்றாக அச்சடிக்கப்பட்ட, நன்றாக எழுதப்பட்ட பிரசுரம். சிலசமயம் துண்டுப்பிரசுரத்தின் தரத்தைப் பார்த்துவிட்டே மக்கள் இரட்சிக்கப்படாமல் போக வாய்ப்பு உண்டு. ஒருவனுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்டால் நல்ல பாத்திரத்தில நல்ல சாப்பாடு கொடுக்க வேண்டும். ஏதோவொன்றை உடைந்த மண் சட்டியில் போட்டுக் கொடுப்பதற்குப்பதிலாக அவனுக்கு ஒன்றுமே கொடுக்காமல் இருக்கலாம். கொடுப்பதாக இருந்தால் எப்படி கொடுக்க வேண்டும்? நன்றாக அச்சடித்து, நன்றாக எழுதி, எழுத்துப்பிழையில்லாமல் நல்ல தரத்தில் கொடுக்க வேண்டும். "சரி, என்னால் துண்டுப்பிரசுரம் கொடுக்க முடியாது." பரவாயில்லை.

### சிறிய காரியங்கள்

சில சமயம் நாம் பாடுவதை மக்கள் விரும்புவார்கள். எனவே பாடலாம். கூட்டத்துக்கு வரும்போது நாம் ஒரு வசனத்தைக் கொண்டுவருவது. "இந்த வாரம் இந்த வசனம் எனக்குப் பிரயோஜனமாயிருந்தது." அல்லது நம் அனுபவத்தைப் பகிர்ந்துகொடுக்கலாம். நம் ஒவ்வொரு அனுபவமும் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும். நான் என் அனுபவத்தைச் சொல்லும்போது, மற்றவர்கள் அதே நஷ்டத்தை அடையாதபடிக்கு அது அவர்களைக் காப்பாற்றும். இன்றைக்கு நாம் ஒரு tight scheduleலில் வேலை பார்க்கிறோம். வரப்போகிற நாட்களில் வேறுசிலர் இதைவிட tight scheduleலில் வேலை பார்க்கக்கூடும். அவர்களுக்கு இது உதவியாக இருக்கக்கூடும். tight scheduleலில் வேலைபார்த்த ஒரு சகோதரர் எப்படி கிறிஸ்துவில் வாழ்ந்தார். நாம் ஒரு முன்னுதாரணமாக மாறுவோம். ஒவ்வொருவரும் ஒரு விநோதமான சூழ்நிலையினூடாய்ச் செல்வார்கள். இந்த சகோதரி செல்லக்கூடிய விநோதமான சூழ்நிலையினூடாய் ஒருவேளை நான் ஒருநாளும் செல்ல மாட்டேன். "நான் சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் சகோதரரே சொல்லி முடித்துவிட்டார்." இது நம்மை நாம் ஏமாற்றுவது. நீ செல்லக்கூடிய சூழ்நிலை விநோதமானது. அதனூடாய்ச் செல்லும் நீதான் அதைச் சொல்ல முடியுமேதவிர வேறு யாரும் சொல்ல முடியாது. பின்பு அதே பாதையின் வழியாகச் செல்லக்கூடிய ஒரு சகோதரனுக்கோ அல்லது சகோதரிக்கோ அது மிகவும் பிரயோஜனமாக இருக்கும். நமக்கு ஒரு முன்மாதிரி இருக்கும். ஒரு முன்னோடி இருக்கும். இவர் போகிற பாதையினூடாய் ஒருவேளை நான் போகமாட்டேன். அதை அவர் பகிர்ந்துகொள்வது நலமாக இருக்கும்.

நானும் ஒரு மாணவனாக இருந்தேன். ஆனால் 1980இல் ஒரு மாணவனாக இருந்ததற்கும், 2006ல் ஒரு மாணவனாக இருப்பதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. நாம் நம்மிடத்தில் இருக்கிற ஐந்து மீன்களையும் இரண்டு அப்பங்களையும் அற்பமாக எண்ணாமல், அதாவது "நான் இப்போது பேசி என்ன நடக்கப்போகிறது" என்று எண்ணாமல், அல்லது "நான் பேசாவிட்டால் என்ன கெட்டுவிடப்போகிறது" என்று எண்ணாமல், இந்த மனப்பாங்கிலிருந்து நாம் தப்பிவிட்டால் தேவன் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஆசீர்வதிக்க ஆயத்தமாயிருக்கிறார். தேவன் எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார். ஆனால், நாம்தான் ஆயத்தமாயில்லை. நாம் நம்மிடத்தில் இருக்கிற ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் வைத்து ரொம்ப நாட்களாக ஆராய்ச்சி செய்துகொண்டேயிருப்போம். "இதை வெளியே காட்டலாமா வேண்டாமா? காட்டினால் யாராவது சிரித்துவிட்டால்!"

நாமெல்லாரும் ஒரு விதத்தில் அந்திரேயாக்கள்தான். “என்னிடத்தில் ஒரு வசனம் இருக்கிறது. ஆனால், அதைச் சொல்லுவதால் என்ன பிரயோஜனம் என்று தெரியவில்லை? அதனால் அதை ஒரு பார்சல் பண்ணி ஒரு மூலையில் மூடிவைப்போம்.” இந்த வாரம் முழுவதும் நான் ஒரு பாட்டைப் பாடிக்கொண்டேதான் இருந்தேன். ஆனால், இப்போது அதைச் சொல்லுவதால் யாருக்கு என்ன இலாபம்?” இந்த வாரம் நான் ஒரு சூழ்நிலையினூடாய்ப் போனேன்.

**சாட்சிகள்**

இன்னொன்று நம் சாட்சிகளெல்லாம் வெற்றி சாட்சிகளாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நம் தோல்விகளையும் பகிர்ந்துகொள்ளலாம். அது எதிர்மறையானது அல்ல. நாம் வெற்றி களின்மூலமாகவும் கிறிஸ்துவை அனுபவிக்கிறோம். தோல்விகளின்மூலமாகவும் கிறிஸ்துவை அனு பவிக்கிறோம். “இந்த வாரம் முழுவதும் நான் வேறு மற்ற காரியங்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந் தேன். கணினியில் வேலைசெய்து கொண்டிருக்கும்போது ஒரு கோப்பை save பண்ணாமல் close பண்ணிவிட்டேன். தேவன் பக்கமாகத் திரும்பினேன். இப்போது நான் தேவன் பக்கமாகத் திரும்பு கிறேன்.” இது நல்ல சாட்சியா இல்லையா? அற்புதமான சாட்சி. இந்த சாட்சி அநேக சகோ தரரைக் காப்பாற்றும். இது இயற்கையான திறமைகள் குறைவானவர்களுக்கு.

சிலரிடம் இயற்கையான திறமைகள் அதிகமாக இருக்கும். இயற்கையான திறமைகள் குறைவாக இருந்தாலும் கர்த்தரிடம் வரமாட்டார்கள். இயற்கையான திறமைகள் அதிகமாக இருந்தாலும் கர்த்த ரிடம் வரமாட்டார்கள் இரண்டுமே ஆபத்துதான். இயற்கையான திறமைகள் நம்மிடம் இருந்தாலும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இயற்கையான திறமைகளிலிருந்து கர்த்தர் நம்மைப் பால்மறக்கச் செய்ய வேண்டும்.

**கூடிவருவதும், கூடிவாழ்வதும்**

நாம் கூடிவருவது ஒருவருக்கொருவர் பிரயோஜனமாக இருக்க வேண்டுமென்றால், நாம் நம்மிடம் இருக்கிற சில அப்பங்களையும் மீன்களையும் கொண்டு வர வேண்டும். யாரும் எதுவும் கொண்டு வராமல் கையை வீசிக்கொண்டு வருகிறோம் என்று வைத்துக்கொள்வோம். எப்படி இருக்கும்? கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஒரு சிறு பையனிடமாவது ஒரு பார்சல் இருந்தது. அவனிடமும் ஒன்றும் இல்லை என்று வைத்துக்கொள்வோம். அதற்கு நாம் ஆயத்தம் பண்ண வேண்டும். அதற்காக ஐந்து நிமிடமோ, பத்து நிமிடமோ, அரைமணி நேரமோ, அல்லது நடந்து போகும்போது .. அந்த வாரத்தின் பின்புலத்தை கொஞ்சம் யோசித்துப்பார்க்க வேண்டும். இந்த வாரம் தேவனுடைய பிள்ளைகளிடம் பகிர்ந்துகொள்வதற்கு ஏதாவது வைத்திருக்க வேண்டும். அடுத்த நாள் காலைச் சிற்றுண்டிக்காக முந்தின இரவே யோசித்துப் பார்க்கிறோம் அல்லது குறைந்த பட்சம் எழுந்தவுடன் அன்றைக்குக் காலையிலாவது, “இன்றைக்கு என்ன சிற்றுண்டி?” என்று கேட்கிறோம். அதுபோல ஒரு கேள்வி எழுப்பலாம் என்று நான் நினைக்கிறேன். “இன்றைக்குத் தேவனுடைய பிள்ளைகளோடு என்ன பேசுவது? அதுபோல, கர்த்தருடைய நாள் கூட்டத்துக்காக மட்டும் அல்ல. தினமும் யாரையாவது பார்க்கும்போது அவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கு ஒரு வசனத்தையாவது வைத்திருந்தால் நல்லது என்று நான் எண்ணுகிறேன். ஒரு இரண்டுவரி செய்தி அனுப்பலாம். இப்போது நம்முடைய சூடான உபகரணம் என்னதுதான்? SMS

நாம் நினைப்பதற்கும் அதிகமாக தேவன் யாரோ ஒருவருக்குள் கிறிஸ்துவைப் பரிமாறுகிறார். அது மட்டும் அல்ல, தேவன் மீதம் எடுக்கவும் செய்வார். நீதிமொழிகளில் ஒரு வசனம் இருக்கிறது. “எவன் நீர்ப்பாய்ச்சுகிறானோ, அவனுக்கு நீர்பாய்ச்சப்படும்.” தேவனுக்காக நாம் ஓர் அப்பத்தை அல் லது ஒரு மீனைப் பகிர்ந்துகொடுத்தால், தேவன் நம்மை நிச்சயமாக ஆசீர்வதிப்பார். தமிழில் ஒரு பழமொழி உண்டு. “இறைக்கிற கிணறுதான் சுரக்கும்.” நான் அதற்காக இப்போது prosperityயைப் பிரசங்கிக்கவில்லை. “தேவன் உன் பணத்தை ஆசீர்வதிக்க வேண்டுமா? தேவன் உன் படிப்பை ஆசீர்வதிக்க வேண்டுமா? தேவன் உன் இதை ஆசீர்வதிக்க வேண்டுமா? தேவன் உன் அதை ஆசீர்வதிக்க வேண்டுமா? கொடு,” என்று. இல்லை. நான் அதைச் சொல்லவில்லை. ஆனால், “நான் கிறிஸ்துவை என் நண்பனுக்கு, என்னுடன் படிப்பவர்களுக்கு, வேலைசெய்பவர்களுக்கு, பகிர்ந்து கொடுப்பதற்கு நான் கொஞ்சம் இழந்திருக்கிறேன். என் நேரத்தை இழந்திருக்கிறேன். என் சுயத்தை நான் இழந்திருக்கிறேன்,” என்று கிறிஸ்துவுக்காகத் தங்களை இழக்கிற எவரும் அதற்குரிய பலனை அடையாமல் போவதில்லை. நான் என் தனிப்பட்ட வாழ்க்கையில் ஆசீர்வாதத்தை விரும்புகிறேன் என்றால் நிச்சயமாக நான் அதைச் செய்வேன். No amount of strategy can substitute God’s work.

இன்னும் சொல்லப்போனால் நம்முடைய எல்லா சாமர்த்தியங்களும் ஏற்ற வேளையில் நம்மைக் கைவிடக்கூடச் செய்யலாம். இதற்கு பழைய ஏற்பாட்டில் ஏதாவது சம்பவம் இருக்கிறதா என்று உடனே என் நினைவுக்கு வரவில்லை. உபாகமத்தில் ஒரு வசனம் இருக்கிறது. “என் சாமர்த்தியமும், என் கைப்பலனும் இதைச் சம்பாதித்தது என்று உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாதிருப்பா யாக.” நம்முடைய படிப்பைப்பற்றி, நம்முடைய பணத்தைப்பற்றி, நம்முடைய தகுதியைப்பற்றி அல் லது நம்முடைய எண்ணிக்கையைப்பற்றி, நம்முடைய Bank Accountயைப் பார்த்து, நம்முடைய score cardயைப் பார்த்து, “ம்ம்.. என் சாமர்த்தியமும், என் கைப்பலனும் இதைச் சம்பாதித்தது. நான் எவ் வளவு பெரிய ஆள்!” என்று சொல்லாதிருப்பாயாக. நீ இன்று பார்க்கிறபடி. சம்பாதிப்பதற்குப் பலத் தைத் தருகிறவர் கர்த்தர். நம்முடைய சாமர்த்தியங்களைக் குறித்து பெருமைப்படக்கூடாது.

நாம் கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவைப் பரிமாறுவதற்காக எதையாவது செலவழிக்கவில்லையென்றால் தேவனுடைய ஆசீர்வாதத்தை நாம் நம் வாழ்க்கையிலும் பார்க்க மாட்டோம். நம்மைச் சுற்றியிருக்கிற வர்களுடைய வாழ்க்கைக்கும் கொண்டுபோக மாட்டோம். நாம் உண்மையுள்ள உக்கிராணக்காரர் களாக இருக்க வேண்டும். தேவன் நம்மிடம் கொடுத்திருக்கிற தாலந்துகள், பணம், நேரம் ஆகிய வைகளெல்லாம் நமக்குரியவை அல்ல. இவை அவிசுவாசிகளை, நம் சகோதர சகோதரிகளை சேவிப்பதற்காக. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இவைகளைச் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். அடுத்த வாரம் இந்த இடத்துக்கு வரும்போது குறைந்த பட்சம், ஒரு வசனம், அல்லது ஒரு பாடல், அல்லது ஒரு சாட்சி ஏதோவொன்றைக் கொண்டுவந்து மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொடுக்க வேண்டும்.

*அப்போஸ்தலர் 20ஆம் அதிகாரத்தில் ஒரு வசனம் இருக்கிறது. நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த வசனத்தை நாம் எழுதிப்போட வேண்டும். “வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கி யம்” (வ. 35). இது பணத்தைப்பற்றி மட்டும் அல்ல. ஏழு நாட்களும் நாம் பல சூழ்நிலையின் வழியாகப் போகிறோமா இல்லையா? அப்போஸ்தலனாகிய பவுலோடு மட்டும்தான் தேவன் இருந் தாரா அல்லது அப்போஸ்தலர் அல்லாத நம்மோடும் தேவன் இருக்கிறாரா இல்லையா? அவருடைய வாழ்க்கையில் மட்டும்தான் கிறிஸ்துவை உருவாக்குவதற்காக தேவன் 24 மணி நேரமும் வேலை செய்தாரா அல்லது சாமான்யமான நம்முடைய வாழ்க்கையிலும் அவர் கிறிஸ்துவை உருவாக்க விரும்புகிறாரா இல்லையா? விரும்புகிறார். அப்படியானால், நம்முடைய எல்லாச் சூழ்நிலையிலும், ஒவ்வொரு மூலை முடுக்கிலும் நாம் கிறிஸ்துவைச் சந்திக்க முடியும். நாம் சந்தித்த கிறிஸ்துவை நாம் பகிர்ந்துகொடுக்க முடியும். ஒருவேளை பவுல் நிறைய வெற்றிகளையும் நாம் நிறைய தோல்வி களையும் பெற்றிருக்கலாம். அது ஒரு பெரிய பிரச்சினை இல்லை. கர்த்தர் எனக்கு உணர்த்தினார். “நான் தோற்றேன். ஆனால், 20 வருடங்களாக இந்தத் தோல்விகளைப்பற்றி எந்த உணர்வில்லாமலும் இருந்தேன். நான் அதை உணரவுமில்லை. மற்றவர்கள் அதைப் பார்க்க நான் அனுமதிக்கவுமில்லை. ஆனால், இப்போது தோற்றவுடன் அதை உணர்ந்தேன்,” என்பது மகா அற்புதமான சாட்சி. தேவ னுடைய பிள்ளைகளின் தோல்விகள் வேதாகமத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 51 ஆம் சங்கீதம் இதற்கு ஒரு பெரிய சாட்சி. அதுவும் தேவனுடைய பிள்ளைகளுக்கு உபயோகமாக இருக்கிறது.*

உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாக இருப்போம். அவிசுவாசிகளுக்கும், சகோதர சகோதரிகளுக் கும் கிறிஸ்துவை எந்த வகையிலாவது கொடுங்கள், பகிர்ந்துகொடுங்கள். அது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.